மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் ஆசிரியர்கள் சம்பந்தமாக பகுதி நேரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓராண்டுக் காலம் பணிபுரிந்தால் அவர்களை நிரந்தரமாக்கி, அதற்குரிய ஊதியத்தை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்னைகள் முழுவதும் மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிசீலனைக்கு உட்பட்டதாகும. ஆகவே, அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்தார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் குறைந்த சம்பளத்தைப் பெற்று பணியாற்றுகிறவர்கள் இந்தக் கணக்கில் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் நடுநிலை பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றுகிறவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று ஆணை இருக்கிறதே. அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்று ஆணையர்களை இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒன்றியப் பள்ளிகளிலேயும் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்டவர்களுடைய பிரச்சினையை நாம் அந்த் அறிக்கைக்குப் பிறகு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, ஹையர் செகன்டரி பள்ளிகள் வரும்போது அதிலேயும் பகுதி நேர ஊழியர்களைப் போடுகின்ற வாய்ப்பிருக்கிறது. ஆகவே பொதுவாகவே பகுதி நேர ஊழியர்களைப் பற்றிய முடிவை அரசு எடுக்க வேண்டியதாக இருக்கிறது.

பள்ளியிறுதி, புகுமுக வகுப்புகளில் தேறாத மாணவர்கள்.

* 626 வினா— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1978 மார்ச் 20]

(அ) S.S.L.C and P.U.C. தேர்வில் தவறிய மாணவர்களை மீண்டும் அவர்கள் படித்த அதே பாடசாலை அல்லது கல்லூரியில் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுகிறதா ?

(ஆ) இல்லை என்ருல், இனிமேலாவது அதுபோல் அனுமதிக் கப்படுமா ?

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : (அ) ஆம், ஆனல் 1977—78-ம் ஆண்டில் 11-ம் வகுப்பில் புதிய பாடத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டபடியால் 1976—77-ல் 11-ம் வகுப்பில் பழைய பாட திட்டத்தின்படி பயின்று ஏப்ரல் 1977-ல் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு எழுதி தவறியவர்களை 1977—78-ஆம் ஆண்டில் மீண்டும் 11-ம் வகுப்பில் படிக்க அனுமதிக்க இயலவில்லை. ஆயினும் 1977—78-ல் பத்தாம் வகுப்பில் பயிலுபவர்கள் 1978 ஏப்ரல் எஸ்.எஸ்.எல்.சி.யில் தவறினல், 1978—79-ல் மீண்டும் பத்தாம் வகுப்பில் சேர்ந்து படிக்க அனுமதிக்க இயலும்.

கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் இது போல் தவறிய மாணவர்கள் மீண்டும் சேர்ந்து படிக்க வகை உள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், திட்டவட்டமான உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அதன் காரணமாக பல ஊராட்சி பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் அரசு நடத்தக்கூடிய பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், சேர்ப்பது கிடையாது. ஆகவே, தனியார் துறையிலே நடைபெறக்கூடிய ஊராட்சிப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பணத்தை வாங்கிக் கொண்டு, சேர்க்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அந்த ஊழலைப் போக்கக்கூடிய வகையிலே அரசு நடத்தக்கூடியகல்லூரிகளிலேயும், பாடசாலைகளிலும் சேர்ப்பதற்கு உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தவறியவர்களை சேர்க்க வேண்டுமென்று திட்டவட்டமான உத்தரவை நாம் போடுவோமேயானல் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் தேறியவர்கள் அல்லது ஒழுங்கான முறையிலே முழுத் தகுதிகள் பெற்றவர்கள் அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும். அவர்களுக்குப் போக மீதி இடங்கள் இருக்குமானல் சேர்த்துக் கொள்ளலாம் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற விதியாகும்.